## கோபிசெட்டிபாளையம் நகராட்சி

## 05.06.2026 ந் தேதி நடைபெற்ற சிறப்புக்கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்

1. திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026–ன் படியும், மாண்பமை உச்சநீதி மன்றத்தின் வழக்கு எண்.6174/2023–ன் படியும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026–ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு வீட்டுக் கழிவுகளை 4 பகுதிகளாக தரம் பிரித்தல், தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை முறையாக கையாளுதல், சேகரிக்கப்பட்ட கழிவுகளை திறந்தவெளி நிலப்பரப்பில் கொட்டுவதை தவிர்த்தல், பொது இடங்களில் குப்பை கொட்டுவதை தடுத்தல், இதனை மீறுவோரின் மீது விதிகளின்படி அபாரதம் விதித்தல், சேகரிக்கப்படும் கழிவுகளுக்கு பதிவேடு பாரமரித்தல், கழிவுகள் உருவாக்குதல், சேகரித்தல், பதப்படுத்துதல் மற்றும் அகற்றுதல் தொடர்பான பணிகளை சரிவர செயல்படுத்துதல். மேலும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026–ன் படிவீடுகளில் சேகரமாகும் கழிவுகளை முறையாக தரம் பிரித்து வழங்குவது பொதுமக்களின் பொறுப்பும் கடமையும் ஆகும் என தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி இந்கராட்சியியை தூய்மையான நகராட்சியாகவும், குப்பையில்லா நகராட்சியாகவும், உருவாக்குவதற்கு, கீழ்கண்டவாறு குழு அமைக்கப்பட்டு செயல்படுத்தபட உள்ளது.

**நகர அளவிலான திடக்கழிவு மேலாண்மைக்குழு**

**குழுதலைவர்/ குழு துணைத்தலைவர் / உறுப்பினர்கள்**

| வ.எண் | குழுபொறுப்பாளர் | பதவி |
|---|---|---|
| 1 | குழு தலைவர் | நகர்மன்றத்தலைவர், கோபிசெட்டிபாளையம் நகராட்சி |
| 2 | குழு துணை தலைவர் | ஆணையாளர்,<br>கோபிசெட்டிபாளையம் நகராட்சி |
| 3 | உறுப்பினர்கள் | சுகாதார அலுவலர், சுகாதார ஆய்வாளர்கள்,<br>கோபிசெட்டிபாளையம் நகராட்சி |
| | | சுகாதாரமேற்பார்வையாளர்கள்,<br>கோபிசெட்டிபாளையம் நகராட்சி |
| | | ரோட்டரி சங்கம் அறக்கட்டளை, மாவட்ட ஒருங்கிணைப்பாளர்,<br>ஒய்ஸ்மென் கிளப் அறக்கட்டளை கோபிசெட்டிபாளையம் |
| | | ஸ்ரீராகவேந்திரா மகளிர் சுய உதவி குழு , பாரியூர் அம்மன் மகளிர் சுய உதவி குழு கோபிசெட்டிபாளையம். |
| | | நகர்மன்றஉறுப்பினர்கள், வார்டுஎண். 1, முதல் 30முடிய<br>கோபிசெட்டிபாளையம் |
| | | தூய்மை இந்தியா திட்ட நகராட்சி பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள்,<br>கோபிசெட்டிபாளையம் நகராட்சி. |

மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள தலைவர் / துணைத்தலைவர் / குழு உறுப்பினர்கள் கொண்டு **நகர அளவிலான திடக்கழிவு மேலாண்மைக்குழு** அமைத்து வார்டு வாரியாக திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தவும் நகர்முழுவதும் உள்ள வணிகர்களுக்கும் பொதுமக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவது மற்றும் வீடுகளில் சேகரமாகும் கழிவுகளை நான்கு வண்ணங்களை கொண்ட கீழ்கண்ட பட்டியலில் உள்ளவாறு வண்ணகுப்பை பெட்டிகளில் தரம் பிரித்து வழங்க விழிப்புணர்வு ஏற்படுத்துதல் வேண்டும்.

| வ. எண் | குப்பை பெட்டிகளின் நிறம் | வீடுகளில் சேகரமாகும் குப்பைகளை பிரித்து வழங்க வேண்டிய கழிவுகளின் விபரம் |
|---|---|---|
| 1 | Wet Waste<br>பச்சை நிற குப்பை பெட்டி<br>(மக்கும் குப்பை ஈரக் கழிவுகள்) | சமையலுக்கு பயன்படுத்தும் காய்கறி கழிவுகள், கீரைவகைகள், முட்டைஒடு, அழுகிய பழங்கள், உணவு கழிவுகள், ஈரக்கழிவுகள் |
| 2 | Dry Waste<br>நீலநிற குப்பை பெட்டி<br>(மக்காத குப்பை உலர் கழிவுகள்) | பிளாஸ்டிக் பொருட்கள், பிளாஸ்டிக் பாட்டில்கள், பிளாஸ்டிக் டம்ளர்கள், பிளாஸ்டிக் கப்புகள், பாலித்தீன் கவர்கள், காகிதம், கார்ட் போர்டு, செய்தி தாள்கள், தர்மாகோல் , ரப்பர், கண்ணாடி, இரும்பு மற்றும் இதர பிளாஸ்டிக் கழிவுகள் |
| 3 | Sanitary Waste<br>சிவப்பு நிற குப்பை பெட்டி<br>(தனிநபர் சுகாதாரக் கழிவுகள்) | வீட்டு உபயோக மருந்து பொருட்கள், நாப்கின், டயாப்பர், மெத்தை, தலையணை |
| 4 | Special Care Waste<br>கருப்பு நிற குப்பை பெட்டி<br>(சிறப்பு கவனம் தேவைப்படும் கழிவு) | மின்னணுசாதனங்கள், பேட்டரிகள், மின் விலக்குகள்,பெயிண்ட் டப்பா, வேதி பொருட்களின் டப்பாக்கள், கேன்கள், காலாவதியான மருந்துகள், குண்டூசிகள், சிரஞ்சுகள், மாசடைந்த மருத்துவ பொருட்கள், |

<u>மொத்த குப்பை உருவாக்குபவர் Bulk Waste Generator</u>

கீழ்காணும் 3 நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றில் வருபவர்களை bulk waste generator ஆக பதிவு செய்யப்பட வேண்டும்.

| | |
|---|---|
| 1 | Buildings with floor area of 20,000 sq.m. or above |
| 2 | Water Consupmtion of 40000 litres per day |
| 3 | Solid waste generation of 100 kg per day |

<u>Type of Bulk Waste generator</u>

| | | |
|---|---|---|
| 1 | Institutional Users | மத்திய அரசுத்துறை அலுவலங்கள் மற்றும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்கள், மாநில அரசுத்துறை அலுவலகங்கள் மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்கள், உள்ளாட்சி நிர்வாக அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், இதர கல்வி நிறுவனங்கள் மற்றும் முக்கிய சமுதாய இடங்கள் மற்றும் இதர இடங்கள் |
| 2 | Commerical users | பேருந்துநிலையம், வணிகவளாகங்கள், உணவகங்கள், தங்கும்விடுதிகள், மருத்துவமனைகள், திருமண மண்டபங்கள், சுற்றுலா தளங்கள் மற்றும் சமுதாயகூடங்கள் |

மேற்கண்ட தொழில் நிறுவனத்தினரும், வணிக நிறுவனங்களும் தங்களது மக்கும் தன்மையுள்ள ஈரக்கழிவுகளை தங்களது சொந்த இடத்தில் சொந்த பொறுப்பில் முறையாக மக்க செய்யும் பணியினை கையாளுதல் வேண்டும், மக்காத கழிவுகளை நகராட்சியில் தூய்மை பணியாளர்களிடம் பிரித்து வழங்குதல் வேண்டும். திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026–ஐ திறம்பட செயல்படுத்திடும் பொருட்டு மாண்பமை உச்சநீதிமன்ற நீதி அரசரால் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை செயல்படுத்துவதற்கும், 05.06.2026–ந் தேதியன்று உலகசுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டும், நமது நகரில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையிலும் மேற்கண்ட பொருள் குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு, மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026–யினை செயல்படுத்துவதற்கும் விதிகளில் உள்ள சுகாதாரம் குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை பொதுமக்களுக்கு தெரிவித்து திறம்பட செயல்படுத்திட தேவையான விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளை மேற்கொள்ளலாம்.
2. நகரப்பகுதியில் தனியார் தொண்டு நிறுவனங்கள், வணிக நிறுவனத்தினர், தொழில் புரிவோர் ஆகியோருடன் இணைந்து மேற்கண்ட சுகாதார திட்டத்தினை செயல்படுத்துவதற்கும் தேவையான குழுக்கள் அமைத்து பொதுமக்கள் ஒத்துழைப்புடன் கோபிசெட்டிபாளையம் நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக முன்நடத்துவதற்கு உரிய விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1587**

2. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள நகராட்சி பள்ளிகளில் முதலமைச்சர் காலை உணவுத்திட்டத்தில் பள்ளிகளின் மாணவ மாணவியர்களுக்கு Raja Shree Anbu Bhavan, Bus Stand Near, Gobichettipalayam ஒப்பந்ததாரர் மூலம் 7 நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் 5 பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காலை உணவு தயார் செய்து வழங்கப்பட்டு வரும் ஒப்பந்த காலம் 04.06.2026 உடன் முடிவடைகிறது.

இந்நிலையில் முதலமைச்சர் காலை உணவுத்திட்டத்தில் நகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு மற்றும் அரசு உதவிபெறும் மாணவ மாணவியர்களுக்கும் உணவு வழங்கும் பணி எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதால், இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 01.06.2026 முதல் 31.08.2026 ஆம் தேதி வரை மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து உடன் ஒப்பந்தப்புள்ளி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.DMA/1956/2026–M1 நாள்.02.06.2026 இல் உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட கடிதத்தின் படி இந்நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளியினை மேற்காணும் Raja Shree Anbu Bhavan, Bus Stand Near, Gobichettipalayam அவர்களுக்கு 05.06.2026 முதல் 31.08.2026 முடிய மூன்று மாதத்திற்கு காலநீட்டிப்பு செய்து வழங்கிடவும், மேலும் ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :– மன்றம் அனுமிதிக்கலாம்.**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1588**

3. இந்நகராட்சியில் உள்ள 30 வார்டுகளிலும் உள்ள வீடுகள், கடைகள், நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களில் தினமும் உருவாகும் கழிவுகளை தரம் பிரித்து சேகரித்து செயலாக்கம் செய்யும் மையங்களில் ஒப்படைக்கும் பணிகளை M/s. LD Manpower Solutions, Vellore நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒப்பந்த காலம் 30.04.2026 உடன் முடிவடைகிறது.

இந்நிலையில் மேற்படி நிறுவனத்தினரின் ஒப்பந்த காலத்தினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். efile No.DMA/1196/2026–SWM2 நாள் 15.03.2026 ன் படி 1.05.2026 முதல் 30.06.2026 வரை தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த காலம் நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளபடுகிறது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. **ந.கஎண்.1609/2022/எச்1**

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1589**

4. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் SBM 2.0திட்டத்தின் கீழ் Material Recovery Facility (5 MT) Capacity அமைக்கும் பணிக்கு ரூ.42.5 இலட்சம் மதிப்பீட்டில் கரட்டூர் பகுதியில் கீழ்கண்ட நிதி ஆதாரங்களும் அமைக்கப்படும் பணிகள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண் DMA/605/2025-SBM1 நாள். 15.03.2026 இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் மேலும் இப்பணியின் செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள நகர்மன்ற அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

| பணியின் பெயர் | மொத்த மதிப்பீட்டு தொகை | மத்திய அரசு நிதி | மாநில அரசு நிதி | நகராட்சி பொது நிதி |
|---|---|---|---|---|
| கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் SBM 2.0திட்டத்தின் கீழ் Material Recovery Facility (5 MT) Capacity அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | ரூ.42.50 இலட்சம் | ரூ.21.30 இலட்சம் | ரூ.14.00 இலட்சம் | ரூ.7.20 இலட்சம் |

அலுவலகக் குறிப்பு:-

மேற்படி பணிக்கு நகராட்சி பொது நிதியில் ரூ.7.20 இலட்சம் வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1590**

(ஒப்பம்) என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

//உண்மை நகல்//

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி